கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

இரண்டாம் வருட பொதுக் கலைமாணித் தேர்வு 2009/2010
(ஏப்ரல்/மே - 2015) (வெளிவாரி)

# HC 202 இலங்கையில் இந்துநாகரிகத்தின் விருத்தி

நேரம் : 03 மணித்தியாலங்கள்

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

01. அனுராதபுர காலப்பகுதியில் இலங்கையில் ஏற்பட்ட இந்துசமய வளர்ச்சி நிலைகளை மேல்வருவனவற்றின் அடிப்படையில் ஆராய்க.
(அ) சாசனங்கள்
(ஆ) நாணயங்கள்
(இ) இந்துக் கோயில்கள்

02. மேல்வரும் அரசர்கள் இலங்கையில் இந்துசமயத்திற்கு ஆற்றிய பங்களிப்பினை மதிப்பிடுக.
(அ) கலிங்க மாகோன்
(ஆ) குளக்கோட்டன்

03. "ஆரியச்சக்கரவர்த்திகளின் ஆட்சிக்காலத்தில் இலங்கையில் சைவ சமயம் உன்னத நிலையை எய்தியிருந்தது." இக்கூற்றின் பொருத்தப்பாட்டினைத் தகுந்த ஆதாரங்களுடன் விபரிக்குக.

04. பிரித்தானியராட்சிக்கால மட்டக்களப்பில் இந்துசமயம் நிலை பெற்றிருந்தவாற்றினை மேல்வரும் தலைப்புக்களில் விளக்குக.
(அ) இந்து சமய இலக்கியங்கள்
(ஆ) இந்துப் பாடசாலைகள்
(இ) சுவாமி விபுலானந்தரின் பணிகள்

05. நவீன இந்துசமய சீர்திருத்த இயக்கங்களில் ஒன்றாகிய இராமகிருஷ்ண இயக்கம் இலங்கையில் ஏற்படுத்திய செல்வாக்கினை மதிப்பிடுக.

06. இலங்கையின் பௌத்தக் கலையில் இந்துச் செல்வாக்கு ஊடுருவியுள்ளவாற்றை ஆராய்க.

07. “கிழக்கிலங்கை இந்துப் பண்பாட்டில் ஆகமம் சாரா சடங்கு வழிபாடுகள் பிரசித்தி பெற்றவை” இக்கூற்றின் பொருத்தப்பாட்டினைப் பரிசீலனை செய்க.

08. எவையேனும் நான்கினுக்கு விளக்கக் குறிப்புக்கள் எழுதுக.
(அ) யக்ஷ வழிபாடு
(ஆ) பொலனறுவைக்கால வெண்கலப் படிமங்கள்
(இ) ஆறுமுகநாவலரின் சைவப் பணிகள்
(ஈ) இலங்கையில் இந்துப் பத்திரிகைகள்
(உ) பொன்னம்பலவாணேஸ்வரம்
(ஊ) இலங்கையில் வீரசைவம்